05.12.2023 OS. No. 155/2018

சாட்சி : PW 1 அமுதா

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை : (6,7 பிரதிவாதிகள் வழக்கறிஞர்)**

மூக்கையா சேர்வைக்கு லெட்சுமி என்ற மகள் உள்ள விவரத்தினை நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 வம்சாவழி சொத்தை ஏன் ககாட்டவில்லை என்றால் தாவா சொத்துக்கும் அவருக்கும் சம்மந்தமில்லை. 17ம் பிரதிவாதி ஜெயராமனுக்கு குமார் என்ற மகன் உள்ளார். அவருக்கும் இந்த சொத்துக்கும் சம்மந்தமில்லை. மேற்படி குமார் உயிரோடு இருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் தென்புறம் உள்ள சொத்து முத்துக்கருப்பாயி என்பவருக்கும், அவரது மகன் முத்துராமலிங்கத்திற்கும் பாத்தியப்பட்ட சொத்து என்று பிராதிலும், நிரூபணவாக்குமூலத்திலும் நான் குறிப்பிடவில்லை. தாசா நொத்தில் மொத்த விஸ்திரணம் எவ்வளவு என்று நிருபிக்க ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துக்கு வடபுறம், தென்புறம் விஸ்திரணம் எவ்வளவு என்று சொல்லவில்லை என்றால் தாவா சொத்துக்கு சொல்லியுள்ளோம். தாவா சொத்து தென்புறம் மூக்கையா சேர்வைக்கும், அழகம்மைக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வடபுறம் மூக்கையா சேர்வைக்கு பாத்தியப்பட்டது என்று காட்ட செட்டில்மென்ட் பதிவேடு தாக்கல் செய்யவில்லை. மூக்கையா சேர்வை சிராவயலில் யாரிடம் வேலை பார்த்தார், எவ்வளவு சம்பளம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. பிராது சொத்து விபரத்தில் காட்டியுள்ள நான்கு மாலுக்கும், வா.சா.ஆ 2 கிரைய பத்திரத்தில் கண்டுள்ள நான்கு மாலுக்கும் வேறுபாடு உள்ளதென்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 கிரைய பத்திரத்தில் சர்வே எண் மற்றும் பைமாஸ் எண் குறிப்பிவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 72/2 என்பது 7 ஏக்கர் கிடையாது என்றும், 6 ஏக்கர் 55 சென்ட் மட்டுமே என்றும் சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 72/2 என்பது எனக்கோ, எனது தாத்தா மூக்கையா சேர்வைக்கோ பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றால் கிரையம் வாங்கிய சொத்து. மூக்கையா சேர்வையும், அழகம்மையும் உறவினர்கள். மேற்படி சொத்து அழகம்மைக்கு எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது. மூக்கையா சேர்வைக்கு இந்த சொத்து எப்படி வந்தது என்றால் அவர் கிரையம் வாங்கியது. வா.சா.ஆ2 கிரைய பத்திரத்தில் விஸ்திரணம் 2 குறுக்கம் என்று குறிப்படப்பட்டது என்றால் எனது தாத்தா 3 ஏக்கர் 79 சென்ட் வாங்கினார். வா.சா.ஆ 2 பத்திரப்படி பார்த்தால் 1 ஏக்கர் 12 சென்ட்தான் கிரையம் வாங்கியதாக வருகிறது என்று

சொன்னால் சரியல்ல. மூக்கையா சேர்வை வா.சா.ஆ 2 கிரைய பத்திரப்படி தாவா சொத்தை கிரையம் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கு அருகில் உள்ள 72/3, 72/4 ஆகியவை கைப்பற்று இல்லாத சொத்து என்று செட்டில்மெண்ட் பதிவேட்டில் சொல்லப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கு தென்புறம் உள்ள சொத்துதான் மூக்கையா சேர்வைக்கும், அழகம்மைக்கும் 2 ஏக்கர் 76 செண்ட் கூட்டுப் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கு மொத்த விஸ்திரணம் ' தவறுதாலாக செட்டில்மெண்ட் பதிவேட்டில் மூக்கையா சேர்வை பேரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ( பிரதிவாதி வழக்கறிஞரின் கோரிக்கையின் பெரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.